**பொதுச் சுற்றறிக்கை இல :** 01-41/2016

எனது இலக்கம்:DMH/A/19/2016

சுகாதார போஷனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

385, வென்.பத்தேகம்ம விமலவம்ச தேரோ மாவத்தை

கொழும்பு -10

02.08.2016

அனைத்து :

மாகாண சுகாதார சேவை செயலாளர்கள்

மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள்

மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர்கள்

போதனா வைத்தியசாலை பணிப்பாளர்கள்

சிறப்பு வேலைத்திட்டங்களின் தலைவர்கள்

நிறுவனத்தலைவர்கள்

## மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகளை சமூக அமைப்பில் வலிமை பெறச்செய்தல்

மது பாவனையனது பொதுச் சுகாதாரம்,வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு போன்றவற்றில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. இது உலகளாவியரீதியில் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் முக்கிய காரணியாக காணப்படுவதுடன் மனிதர்களின் வாழ்க்கையை சிதைப்பதாகவும், குடும்பங்களை சீர்குலைப்பதாகவும்,சமூக வலைப்பின்னல்களை சேதப்படுத்துவதகவும் அமைகின்றது.

இலங்கையில் மதுபாவனையானது ஆண்களில் 39.6% ஆகவும் பெண்களில் 2.4% காணப்படுகிறது(தேசிய மது பாவனை பற்றிய ஆய்வு இலங்கை, 2012).

மேலும், நாட்டில் நிகழும் பத்து மரணங்களில் ஏழு மரணங்கள் தொற்றா நோய்கள் காரணமாக ஏற்படுவதுடன்,அதற்கான நான்கு முக்கிய காரணிகளுள் மதுபாவனையும் அடையாளம் காணப்பட்டுள்ளது. மதுபாவனையனது தற்கொலை,மற்றும் தற்கொலை முயற்சிகளுடன் தொடர்புடையதாக உள்ளது(ர.அபயசிங்க,2008).

இலங்கையில் மதுபாவனை, குடும்ப வன்முறைகள் ஏற்பட மூல காரணியாக உள்ளதுடன் வறுமையுடனும் ஒருசிக்கலான தொடர்பைக்காட்டுகிறது(சுப்பிரமணியம்,பீ.&சிவயோகன 2001,டீ.சில்வா.வீ 2011).

அதிகரித்து வரும் மதுபாவனையை கட்டுப்படுத்தும் நோக்குடன் இலங்கை அரசாங்கமானது தேசிய மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான கொள்கையை உருவாக்கி அதனை மிக விரைவில் பொதுமக்களிடையே அமுலுக்கு கொண்டுவர தீர்மானித்துள்ளது.இக்கொள்கையை நடைமுறைப்படுத்த வழிகோலும் வகையில் உங்கள் நிறுவனங்களில்,மற்றும் குறித்த பிரதேசங்களில் மதுக்கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து பங்குதாரிகளையும் உயிர்ப்புடன் பங்கேற்கும் வகையில் கீழ்காணும் செயற்பாடுகளை நடாத்த வேண்டப்படுகிறீர்கள்.

சாராம்சமாக,

1. மதுபாவனை கட்டுப்படுத்தும் மற்றும் ஒழிக்கும் நடவடிக்கைகளை தேசிய மதுக்கட்டுப்பாட்டு கொள்கைக்கேற்ப நடைமுறைப்படுத்தவும் மற்றும் மேற்பார்வை இடவும் அனைத்து சகல மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்/ மாவட்ட சுகாதார பணிப்பாளர்கள் உதவ வேண்டும்.
2. மனநல விசேட வைத்திய நிபுணர், மாவட்ட மனநல வைத்திய நிபுணர்கள், மனநல வைத்தியர்கள், பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட்டு அனைத்து சுகாதார சேவை ஊழியர்களுக்கும் மற்றும் சமூகத்திற்கும் மதுக்கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும். மேலும், சமூக அளவில் இலக்கு குழுக்களான; பாடசாலைகள், விளையாடுக்கழகங்கள், சமூக நிறுவனங்கள்,சிவில் சமூகம் போன்றவற்றுடன் நிகழ்சிகளை ஒழுங்கமைத்தல்.
3. அனைத்து மனநல விசேட வைத்திய நிபுணர்கள் அவர்களது சேவை நிலையங்களில், மதுபாவனையாளர்களுக்கான பராமரிப்பு சேவையை வழங்கவும் , மீள் பரிசீலனை செய்யவும், புனர்வாழ்வு சேவையை வழங்கவும் குறைந்தபட்சம் ஒரு பிணி நிலையத்தை நடாத்துவதட்கு வேண்டப்படுகிறீர்கள். பொது சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதாரம் தவிர்ந்த ஏனைய பங்குதாரிகளான சமூக சேவைகள் திணைக்களம், இளைஞர் சங்கம், சமூர்த்தி உதவியுடன் குறித்த பிரதேசத்தின் சமூக அமைப்பில் மதுபான கட்டுப்பாட்டு பிணி நிலையம் ஒன்றை மனநல மருத்துவரால் ஒழுங்குபடுத்தபட்டு நடாத்துமாறு வேண்டப்படுகிறீர்கள்.
4. மதுபானநிறுவனங்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் சிறுவர்களுக்கு அணுகக்கூடிய பொது நிகழ்வுகள்(விளையாட்டு நிகழ்சிகளை) நடாத்துவதை தவிர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் வேண்டப்படுகிறீர்கள்.தேசிய மது மற்றும் புகைத்தல் கட்டுப்பாட்டுச் சபையின் மதுபாவனை குறித்த சட்ட விதிகள் மீறப்படும் போது அவற்றை முறையிடுவதற்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

5. மதுபாவனை புனருத்தாபன சேவைகள் சமூக அமைப்பிலும்,வைத்தியசாலைகளிலும் பெறுவதற்காக குறைந்தபட்சம் ஒரு புனருத்தாபன நிலையமொன்றை ஒரு மாவட்டத்தில் காணும்படியாக நிறுவவேண்டும். மதுபாவனையில் பாதிக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கான சேவைகளை ஆரம்ப சுகாதார உத்தியோகத்தர்கள் மூலமாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

6. இருபத்தியொரு வயதிற்கு குறைவானவர்களுக்கு,ஹோட்டல் ,உணவகங்களில், மற்றும் மதுவிடுதிகளில் மது விற்கவோ/வழங்கவோ தடைசெய்யும் முகமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து பொதுச்சுகாதார வைத்தியர்களும் பொது சுகாதார பரிசோதகர்களும் வேண்டப்படுகிறீர்கள்.

இலங்கையில் சமூக அமைப்பில் மதுக்கட்டுப்பாட்டினை மேற்கொண்டு,உள நல எழுச்சியை ஏற்படுத்தி,மதுவால் உண்டாகும் உபாதைகள் மற்றும் இறப்புக்களை கட்டுப்படுத்த உங்களது முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

மேலதிக விபரங்களை உங்களது பிரதேச மனநல விசேட வைத்தியர், மனநல வைத்தியர்கள்,உளநல சுகாதார பணியகம் சுகாதார அமைச்சு(mhusrilanka@gmail.com),மற்றும் தேசிய மது மற்றும் புகைத்தல் கட்டுப்பாட்டுச் சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களது ஒத்துழைப்புக்கு மிக்க நன்றி.

..............................................................

**Dr.பீ.ஜீ.மகிபால**

**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. P. G. Mahipala
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya",
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

**பிரதி:**
**சுகாதார போஷனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு செயலாளர்**
**அனைத்து பொது பிரதி பணிப்பாளர்கள்**
**தலைவர், தேசிய மது மற்றும் புகைத்தல் கட்டுப்பாட்டுச்சபை(NATA)**
**பணிப்பாளர் உளநல சுகாதாரப் பணிமனை**
**தலைவர்,இலங்கை மனநல விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம்**